StudentBounty.com

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : 3 × 4 = 12

1. 'நாடு' என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை ?

2. கவிதைக்குரிய நல்லியல்புகளாக கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

3. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

4. அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவழகனார் கருதுவதற்குக் காரணங்கள் யாவை ?

5. இசைத்தமிழ் என்பது யாது ? முற்காலத்தும், இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை ?

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : 3 × 4 = 12

6. 'அறுமுறை வாழ்த்து' - விளக்குக.

7. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை ?

8. 'செல்வம் நிலைபேறு உடையதன்று' என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது ?

9. ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு. வ. காட்டும் வழிகள் யாவை ?

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : 1 × 6 = 6

11. இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக நும் பாடப்பகுதியில் வரும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

12. ஓவியக் கலை தமிழகத்தில் சிறந்திருந்தது என்பதை விளக்குக.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகா எழுதுக : 2 × 10

13. *'மண்'* அல்லது *'பழிக்குப்பழி'* என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'கிழிசல்'* அல்லது *'ஒவ்வொரு கல்லாய்'* என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'பால்வண்ணம்பிள்ளை'* அல்லது *'வேலி'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

தான் பெற்ற நான்கு பிள்ளைகளாளும் வாழ்வின் கடைசி காலத்தில் துரத்தியடிக்கப்பட்டு - நடுத்தெருவிற்கு வந்துவிட்ட தந்தையொருவர் - தன் ஒரே சொத்தான இசைஞானத்தால் - சமுதாயத்தில் எதிர்நீச்சல் போட்டு - ஊர்தோறும் இசைக்கச்சேரி செய்து - நற்புகழும், பொருளும் பெற - அதைக்கண்டு பிள்ளைகள் திருந்தி - தந்தையிடத்தில் சரண் அடைந்ததாகக் கற்பனை செய்து இருபக்க அளவில் கதை எழுதுக.

*அல்லது*

நீவிர் விரும்பிய ஓர் சுற்றுலாவுக்குச் செல்ல முடியாது தடையேற்பட்டு, அதனால் வருத்தம் எய்தியதாக ஒரு நிகழ்வைப் புனைந்தெழுதுக.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே
திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள் ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம் செய் முழங்கு சங்கே !

– பாவேந்தர் பாரதிதாசன்

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Look before you leap.

17. Where there is a will, there is a way.

18. Blood is thicker than water.

19. Indian people always dislike violence.

20. By hard work Japan has become number one in Industry.

21. To err is human; to forgive is divine.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றனை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வு அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''முயற்சி திருவினை ஆக்கும்''

ஆ) ''இருதலைக் கொள்ளி எறும்பு போல''

இ) ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

*அல்லது*

'*கவின்மிகு கானகம்*' அல்லது '*புதிய பாரதம்*' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா**

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை எழுதுக. 5 × 2 = 10

நோபல் பரிசின் ஆக்கத்திற்கு உரியவராய் விளங்கியவர் ஆல்ஃபிரட் நோபல் என்பவராவார். இவர் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவர். இவர் வெடிமருந்தான 'டைனமைட்டை' 1866 ல் கண்டுபிடித்தார். தன்னுடைய கண்டுபிடிப்பின் மூலம் அளவற்ற பணத்தினைச் சம்பாதித்தார். 90 லட்சம் அமெரிக்க டாலர் அளவான தொகையினை அறக்கட்டளைக்கு அளித்தார். மேலும் வருடந்தோறும் அதிலிருந்து கிடைக்கும் பணத்தை விருதாக வழங்கும்படி கேட்டுக் கொண்டார். அவ்விருதானது அவரின் ஞாபகமாக 'நோபல் பரிசு' என வழங்கப்படுகிறது.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

நோபல் பரிசானது 1968 வரை ஐந்து துறைகளுக்கு வழங்கப்பட்டது. நோபல் பரிசின் பொறுப்பாளர் குழுவாக ஐந்து நபர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இந்தியாவில் முதன் முதலில் நோபல் பரிசு பெற்றவர் 'இரவீந்திரநாத் தாகூர்' ஆவார். இவர் எழுதிய 'கீதாஞ்சலி' இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றது.

*வினாக்கள் :*

16. ஆல்ஃபிரட் நோபல் எப்பரிசினை உருவாக்கினார் ?

17. 'வெடிமருந்து டைனமைட்' கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு எது ?

18. ஆல்ஃபிரட் நோபல் அறக்கட்டளைக்கு வழங்கிய தொகை எவ்வளவு ?

19. 1968 வரை நோபல் பரிசு எத்தனை துறைகளுக்கு வழங்கப்பட்டது ?

20. நோபல் பரிசின் பொறுப்பாளர் குழு எத்தனை நபர்களைக் கொண்டது ?

21. இந்தியாவில் முதன்முதலில் நோபல் பரிசு பெற்றவர் யார் ?

22. இரவீந்திரநாத் தாகூர் எழுதிய நூலின் பெயர் என்ன ?

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக.
$10 \times 1 = 10$

23. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. ஒட காண்பது வெள்ளம்; ஒடுங்க காண்பது யோகியர் உள்ளம்.

( ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. 'உழை' - 'உலை' அல்லது 'கிலி' - 'கிழி'

( சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

26. 'வீக் ஆன என் ஆண்ட்டி ரெஸ்ட் எடுக்க வேண்டும்' - என்று ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் அட்வைஸ் கூறினார்.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

27. வேதாரணியம், மீனாட்சி

( வடமொழிக் கலப்பினை நீக்கி எழுதுக )

28. பல்லியில் மணி அடித்ததும் மாணவர்கள் கழைந்து சென்றனர்.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக )

29. குபுக் குபுவென்றுப் புகை மண்டிலம் சூழ்ந்தது.

( தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

30. குயில் அகவ மயில் கூவியது

( மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

31. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா ?

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

32. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது என்று என் தந்தை சொன்னார்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).

---

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers